**செ. கு. எண்:089** **நாள்: 21.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 21.6.2017

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், புதுக்கோட்டை – தஞ்சாவூர் மெயின் ரோடு, புதுநகர் செல்லும் சாலை அருகில் 10.4.2017 அன்று நடந்த சாலை விபத்தில், தஞ்சாவூர் வட்டம், நாஞ்சிக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு ரங்கராஜ் என்பவரின் மகன் செல்வன். மகேந்திரன், திரு அடைக்கலம் என்பவரின் மகன் திரு. மாரிமுத்து, திரு ராஜேந்திரன் என்பவரின் மகன் செல்வன் கவியரசன், திரு பெருமாள் என்பவரின் மகன் திரு ராமராசு, திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு சுப்ரமணியன் என்பவரின் மகன் திரு வினோத்குமார் மற்றும் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தைச் சேர்ந்த திரு கணேசன் என்பவரின் மகன் செல்வன் ரஞ்சித்குமார் ஆகிய ஆறு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் ஐந்து நபர்கள் பலத்த காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**